## புகையிலைக் கரைசல்

**செய்முறை - I:** புகையிலை - 3 கிலோ (15 லிட்டர் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து ஆற விடவும்), எலுமிச்சை சாறு - 1/2 லிட்டர், எருக்கு இலை சாறு - 1/2 லிட்டர்

**பயன்படுத்தும் முறை:** 60 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கர் பயிருக்குத் தெளிக்கவும்.

**செய்முறை - II:** புகையிலை - 3 கிலோ (15 லிட்டர் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து ஆற விடவும்), கோமியம் - 10 லிட்டர்

**பயன்படுத்தும் முறை:** 40 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கர் பயிருக்குத் தெளிக்கவும்.

**செய்முறை - III:** புகையிலை சாறு - 500 மி.லி, வேப்பெண்ணெய் - 500 மி.லி, பூண்டு விழுது - 1/2 கிலோ, இஞ்சி விழுது - 1/4 கிலோ, பச்சை மிளகாய் 1/4 கிலோ, பெருங்காய கரைசல் - 100 மி.லி

**பயன்படுத்தும் முறை:** 60 லிட்டர் தண்ணீர் சேர்த்து கலக்கி ஒரு ஏக்கர் பயிருக்குத் தெளிக்கவும்.

## துளசிக் கரைசல்

**செய்முறை:** துளசி இலை - 100 கிராம் (இரவு முழுவதும் ஊறவைக்கவும். மறுநாள் அரைத்துக் கொள்ளவும்)

**பயன்படுத்தும் முறை:** 2 லிட்டர் தண்ணீர் சேர்த்து இரண்டு செண்ட் நிலத்திற்கு தெளிக்கவும்.

**கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள்:** அசுவுணி, ஆமணக்கு உண்ணிகள், கரப்பான் பூச்சி, கொசு, சிகப்பு சிலந்தி, படைப்புழு, பருத்திச் சிகப்புப் பூச்சி, வேர்முடிச்சுப் புழு.

## மஞ்சள்க் கரைசல்

**செய்முறை:** மஞ்சள் கிழங்கு - 1 கிலோ, கோமியம் - 10 லிட்டர் (இரவு முழுவதும் ஊற வைக்கவும். மறுநாள் அரைத்துக் கொள்ளவும்)

**பயன்படுத்தும் முறை:** 30 லிட்டர் தண்ணீர் சேர்த்து அரை ஏக்கர் நிலத்திற்கு தெளிக்கவும்.

**கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள்** : அசுவுணி, சிகப்புச் சிலந்தி, சாம்பல் நோய், நெல் இலைச்சுருட்டுப் புழு, நெல் கூன் வண்டு, நெல் தண்டு துளைப்பான், பச்சை தத்துப்பூச்சி, படைப்புழு, பருத்திப் புழுக்கள், பயிறு வண்டுகள்.

## புங்கம் கரைசல்

**செய்முறை - I:** புங்க இலை - 1 கிலோ (இரவு முழுவதும் ஊறவைக்கவும். மறுநாள் அரைத்துக் கொள்ளவும்)

**பயன்படுத்தும் முறை:** 5 லிட்டர் தண்ணீர் சேர்த்து இரண்டு செண்ட் நிலத்திற்கு தெளிக்கவும்.

**செய்முறை - II:** ஓடு நீக்கிய புங்கம் விதை - 50 கிராம் (அரைத்து இரவு முழுவதும் ஊற வைக்கவும்)

**பயன்படுத்தும் முறை:** 1 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு செண்ட் நிலத்திற்கு தெளிக்கவும்.

**செய்முறை - III:** புங்கம் பிண்ணாக்கு - 100 கிராம் (அரைத்து இரவு முழுவதும் ஊற வைக்கவும்)

**பயன்படுத்தும் முறை:** 1 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு செண்ட் நிலத்திற்கு தெளிக்கவும்.

**செய்முறை - IV:** தண்ணீர்-1 லிட்டர், புங்கம் எண்ணெய் - 30 மி.லி

**பயன்படுத்தும் முறை:** ஒரு செண்ட் நிலத்திற்கு தெளிக்கவும். (தயாரித்த உடனே தெளிக்க வேண்டும்)

**செய்முறை - V:** புங்கம் எண்ணெய் - 10 மி.லி. வேப்பெண்ணெய் - 40 மி.லி. தண்ணீர் - 1 லிட்டர்

**பயன்படுத்தும் முறை:** ஒரு செண்ட் நிலத்திற்கு தெளிக்கவும். (தயாரித்த உடனே தெளிக்க வேண்டும்)